பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை 23.12.2025 கதிர் 045

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையின் தலைநகரான கொழும்பில் தேசிய மக்கள் சக்தி தனது முதலும் முக்கியத்துவமுமான தோல்வியைச் சந்தித்துள்ளது. கொழும்பு மாநகர சபையின் ☞ 2

# ஜெய்சங்கர் வந்து சேர்ந்தார்



**இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர், பிரதமர் நரேந்திர மோடியின் சிறப்புத் தூதுவராக ஒரு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று கொழும்பை வந்தடைந்தார். இந்தப் பயணத்தின்போது அவர் அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.**

**அயலுறவுத்துறை அமைச்சரின் இந்தப் பயணமானது இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' கொள்கையை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட** ☞ 2

## வடக்கு உள்ளிட்ட 4 மாகாணங்களில் காற்றின் தரக் குறியீடு பெரு வீழ்ச்சி

இலங்கையின் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களின் பல பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு 50 முதல் 200 வரை பதிவாகியுள்ளதாகவும், இதனால் காற்றின் தரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் வளிமாசடைந்துள்ளமை தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் திடீரென ☞ 6

## கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே நாளை முதல் தொடருந்து சேவை

பேரிடரால் இடைநிறுத்தப்பட்ட வடக்குக்கான தொடருந்து சேவை நாளை (புதன்கிழமை) முதல் முழுமையாக ஆரம்பிக்கப்படவுள்ளது என தொடருந்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய யாழ். தேவி கடுகதி தொடருந்தும் நாளை முதல் கொழும்பு கோட்டை காங்கேசன்துறை வரை சேவையை மீண்டும் தொடங்கவுள்ளது. ☞ 6

## தமிழ் கட்சிகளின் தலைவர்களை இன்று சந்திக்கிறார் ஜெய்சங்கர்

அரசு முறைப் பயணமாக இலங்கை வந்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், இன்று வடக்கு கிழக்குத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இருநாள் பயணமாக வந்துள்ள இந்திய அயலுறுவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்று திங்கட்கிழமை நாட்டை வந்தடைந்தார்.

இந்தப் பயணத்தின்போது அவர் அரசுத் தலைவர், பிரதமர், வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர், மலையகத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தவிருப்பதுடன், அதன் ஓரங்கமாக வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக்கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை (23) பி.ப 3.00 மணியளவில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. இச்சந்திப்பில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் ☞ 2

## பெருந்தோட்ட மக்களுக்கு நிலமில்லை எனக்கூறி அரசுத் தலைவர் அநுர கடமை தவறவேமுடியாது

### முத்துலிங்கம் கொந்தளிப்பு

பெருந் தோட்டக் குடும்பங்களுக்கு நிலம் வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போது, மலையகப் பகுதியில் நிலம் இல்லை என்றும், நிலங்களை இணைந்து தேடலாம் என்றும் அரசுத் தலைவர் அநுரகுமார நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவித்தார். நாட்டின் தலைவராக, அனைத்து மக்களினதும் நலன் மற்றும் உரிமைகளை பாதுகாப்பது அரசமைப்பிற்கமைய அரசுத் தலைவரின் கடமையாகும். நிலம் இல்லை என்று கூறி பொறுப்பை வேறு திசைக்கு மாற்றி தமது கடமையிலிருந்து விலக முடியாது என கண்டி - சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் முத்துலிங்கம் தெரித்தார்.

கொழும்பு – குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தித்வா' புயல், நாடெங்கும் முன்னெப் போதும் இல்லாத அளவிலான அழிவுகளை ஏற்படுத்தியது. இதனால் நேரடியாக 524,188 குடும்பங்களும், 1,812,311 தனி நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலாக பலர் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக பதுளை, கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகியவை காணப்படுகின்றன. இம்மாவட்டங்களில் மாத்திரம் 21 சதவீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் கவலைக்குரிய விடயமாக, பதிவான இறப்புகளில் 69 சதவீதமானவையும், காணாமல் போனவர்களின் 72 சதவீதமானவையும், முற்றாக அழிந்த வீடுகளின் 55 சதவீதமானவையும், மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் 33 சதவீதமானவையும் இந்த ☞ 2

## சி.ரி.ஸ்கானர், மெமோகிராம் உபகரண கொள்வனவில் முறைகேட்டுக்கு முயற்சி

### கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கம் குற்றச்சாட்டு

மேல் மாகாண சபையினால் கம்பஹா மற்றும் அவிசாவளை வைத்தியசாலைகளுக்கு மருத்துவ இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பெரும் முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம குற்றம் சாட்டியுள்ளார். ☞ 6

## புதிய இராச்சியப் பாதுகாப்புச் சட்டத்தில் பயங்கரவாதத்திற்கு வரையறை இல்லை

### முன்னாள் எம்.பி. சரத் வீரசேகர சுட்டிக்காட்டு

பயங்கரவாதத்தில் இருந்து இராச்சியத்தை பாதுகாக்கும் சட்டவரைவில் 'பயங்கரவாதம்' என்பதற்கு தெளிவான வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. இதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயக அம்சங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளு-மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தில் இருந்து இராச்சியத்தை பாதுகாக்கும் சட்டவரைவு வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்களின் அபிலாசைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளமைக்கு நீதியமைச்சுக்கு நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டவரைவில் பயங்கரவாதம் என்றால் என்பதற்கு தெளிவான வரைவிலக்கணம் குறிப்பிடப்படவில்லை. பயங்கரவாதத்துக்கு தெளிவான வரைவிலக்கணம் குறிப்பிடப்படவில்லையாயின் 'பயங்கரவாதிகள்' என்பது யார் என்ற கேள்வி எழும். அதேபோல் பயங்கரவாதம் என்பதற்கு தெளிவற்ற விளக்கமே வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பினர் தமிழ் பூர்வீக நிலத்துக்காகவே போரிட்டார்கள். அதேபோல் உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் இஸ்லாமிய இராச்சியத்துக்காகவே நடத்தப்பட்டது. போர் மற்றும் வேறு எதனுடனும் தொடர்ப்புப்படாத மக்களைப் படுகொலை ☞ 6

## பொலிஸாரைத் தாக்கும் ஆளும்கட்சி எம்.பிக்கள்

### நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

பொலிஸார் மீது ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதற்கு பொலிஸ்மா அதிபருக்கு வெட்கம் என்பது கிடையாதா என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 6

## ஆளும்கட்சி எம்பியை தாக்கினார் என பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது

தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில், பாதிக்கப்பட்டார் எனக் கூப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

டிசெம்பர் 20 இரவு 10 மணியளவில் சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் கடமையை நிறைவுசெய்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை, வழிமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார உள்ளிட்ட குழுவினர் தாக்கியுள்ளனர் என்று கொலொன்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

மேற்படி தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பாதீடு நேற்றுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பாதீட்டுக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பெரிய அரசியல் நகர்வுகள், அரசியல் காய் நகர்த்தல்கள், டீல் கள் மூலமே கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. மத்தியில் ஆட்சியில் இருக்கும்போது கொழும்பு மாநகர சபையை வேறுகட்சியின்பிடியில்கொடுப்பதுஅதற்கொரு மதிப்புக் குறைவாகப் பார்க்கப்பட்டதன் காரணமாகவே கடும் முயற்சியின் மூலம் அதனைக் கைப்பற்றியது.

அது தேசிய மக்கள் சக்தி தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வெற்றிபெற்று வந்த காலம் என்பதால் எதிர்க் கட்சிகள் தமக்கிடையே ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாத நிலை இருந்தது. அதனைப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபையில் முதல் தடவையாக ஆட்சியைப்பிடித்தது. ஆனால், இப்போதுதேசிய மக்கள்சக்தியின்மீதானமக்கள்கவர்ச்சிமங்கத் தொடங்கிவிட்டது. அது ஒரு மாற்றத்திற்குரிய ஆளும்தரப்பன்று, அதுவும் முன்னைய ஆளும்தரப்புக்களிலிருந்து ஆட்சியளவில் வேறுபட்டதல்ல என்பது புரிந்துவிட்டது. அதனிடம்ஓரிருநல்லகுணங்கள்இருந்தாலும் அதுவும்ஐக்கியதேசியக்கட்சியினதும்சுதந்திரக் கட்சியினதும் பொது ஜன பெரமுனவினதும் செல்லரித்துப்போன கொள்கைகளையும் கோட்பாடுகளையுமே பின்பற்றுகின்றது என்பது தெளிவாகிவிட்டது. அதனால் இப்போது அதற்கெதிராக எதிரக் கட்சிகள் ஒருங்கிணைவதில் தடை ஏதுமில்லை.

கொழும்பு மாநாகர சபையில் ஆளும்தப்பின்பாதீடுதோற்கடிக்கப்பட்டிருப்பது அதன் வீழ்ச்சிக்கான அறிகுறி. பாதீடு தோற்கடிக்கப்பட்டதால் கொழும்பு மாநகர சபையில் ஆளும்தரப்புக்கு இப்போதைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. பாதீடு இரண்டாவது தடவையாகவும் முன்வைக்கப்படும். அதிலும் தோற்கடிக்கப்படுமாக இருந்தால், அதனை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநகர சபை முதல்வர் நடைமுறைப்படுத்துவார். இதுபோன்றுமுதல்இரண்டுவருடங்களுக்கும் செயற்படமுடியும்என்பதால்2027வரையும்கூட தேசிய மக்கள் சக்திக்கு உள்ளூராட்சி சபைகளில் எந்த ஆபத்தும் இல்லை. அதன் பின்னரே இதன் உண்மையானபலப்பரீட்சை தொடங்கும். ஆனாலும் இலங்கையின் தலைநகரத்திலேயேஆட்சிக்குவந்துஒருவருட காலத்திற்குள்ளேயே ஆளும்தரப்பின் பாதீடு தோற்கடிக்கப்பட்டிருப்பது மிக முக்கியமான அரசியல் கவனம்.

அதேநேரம், நாடாளுமன்றத் தேர்தலில் தேசியமக்கள்சக்தியிடம்வடக்கைஇழந்திருந்த தமிழ்அரசுக்கட்சி, சிலதுல்லியமானஅரசியல் நகர்வுகள் மூலமாக யாழ்ப்பாணம் மாநகர சபையில் தனது பாதீட்டை வெற்றிபெற வைத்துள்ளது. தெற்கில்கொழும்புமாநகரசபை சிங்கள அரசியலின் மைய அடையாளமோ அதேபோன்றே வடக்கில் யாழ்ப்பாணம் தமிழர் எதிர்ப்பு அரசியலின் ஓர் அடையாளம், குறியீடு. இங்கும் தமிழ் அரசுக் கட்சியின் பாதீட்டைத் தோற்கடிக்கும் நகர்வை தேசிய மக்கள் சக்தி மேற்கொண்டது. ஆனால் அது வெற்றிபெறவில்லை. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் தவிர மற்றைய எந்தக் கட்சியும் ஆளும்தரப்போடு சேர்ந்து எதிர்க்க முன்வராத காரணத்தால் தமிழ் அரசு தனது முதலாவது பாதீட்டை வெற்றிகரமாக நிறைவேற்றியது.

அதாவது, தெற்கில் சிங்கள அரசியலின் அடையாளப் புள்ளியில் தேசிய மக்கள் சக்தி தோற்றுப்போக, வடக்கில் தமிழரின் அரசியல் அடையாளப் புள்ளியில் தமிழ்க் கட்சிகள் மீண்டும் எழுந்து நின்றன. இது அடுத்து வரும் தேர்தல்களில் கணிசமான தாக்கத்தைஏற்படுத்திதேசியமக்கள்சக்தியைத் தோற்கடிக்கும் என்று எதிர்வு கூறுவதற்குப் போதுமான அறிகுறியல்ல என்னபோதும், தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்தைப் போன்று இனியெப்போதும் தாமே ஆட்சியில் என்கிற கனவு சாத்தியமாவதற்கான வாய்ப்புக்கள் நிறைவேறாதுஎன்பதைநிச்சயம்சொல்லலாம். அந்த எதிர்பார்ப்புக்கள் சரிவை நோக்கியே பயணிக்கின்றன என்பதை இந்த அறிகுறி நிச்சயம் வெளிப்படுத்துகின்றது என்று கொள்ளலாம். ..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## ஜெய்சங்கர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரழிவுகளைச்முகாமைத்துவம்செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சாகர் பந்து திட்டத்தின் பின்னணியில் மேற்கொள்ளப்படுவதாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தித்வா சூறாவளி தாக்கிய 24 மணி நேரத்திற்குள் இந்தியா தனது மீட்புக் குழுக்களை அனுப்பி, இலங்கைக்கு உதவிய முதல் நாடாகத் திகழ்ந்தது. சுமார் 1,134 தொன்களுக்கும் அதிகமான மனிதாபிமான உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் உலர் உணவுகள், கூடாரங்கள், போர்வைகள், சுகாதாரக் கருவிகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் அடங்கும்.

இந்திய இராணுவத்தின் 60 தற்காலிக மருத்துவமனைகள் மஹியங்கனை பகுதியில்அமைக்கப்பட்டு, சுமார்7,000-க்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும், நடமாடும் அதிநவீன மருத்துவக் கியூப்களும் வழங்கப்பட்டன. மண்சரிவு நிலச்சரிவுமற்றும்வெள்ளத்தால்துண்டிக்கப்பட்ட போக்குவரத்துப் பாதைகளைச் சீரமைக்க, இந்திய இராணுவப் பொறியாளர்களின் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கைப் பயணத்தில் அமைச்சர் ஜெய்சங்கர், இந்த மீட்புப் பணிகளின் அடுத்தகட்டமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மீட்புப் பணிகளுக்காக இந்தியா சார்பில் ஒரு சிறப்பு நிதியுதவித் தொகுப்பை அவர் அறிவிக்க வாய்ப்புள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த குறுகிய பயணத்தில் அவர் வடக்கு, கிழக்கு மற்றும் மலைய தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளார்.

## ஆளும்கட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலொன்ன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் சம்பவத்தன்று இரவு 10.10 மணியளவில் கொலொன்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார, கெப் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது சூரியகந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே தனது வாகனத்தை வழிமறித்துத் தாக்குதல் நடத்தினார் எனத் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் பின்னர் பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. வைத்தியசாலை அறிக்கையின்படி, பொலிஸ் உத்தியோகத்தரின் சுவாசத்தில் மது வாசனை இருந்ததாகக் குறிப்பிடப்படுள்ளது. இருப்பினும் சிறுநீர் மாதிரிப் பரிசோதனையில் அவர் மது அருந்தவில்லை என்பது உறுதியாகியுள்ளது. ஆகையால் மேலதிக உறுதிப்படுத்தலுக்காக அவரது குருதி மாதிரி பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது ன்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குற்றவியல் அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் குறித்த பொலிஸ் காண்ஸ்டபிள் கைது செய்யப்பட்டதோடு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை எல்பிட்டிய பிரிவுக்குப் பொறுப்பானசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், எல்பிட்டிய குற்றப்புலனாய்வுப்பணியகஅதிகாரிகள்இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்ல குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களிலிருந்தே பதிவாகியுள்ளன. பேரிடரிற்குப் பின்னரான உடனடி காலகட்டத்தில், ஆளும்தரப்பு, சிவில் சமூக அமைப்புகள், தொண்டுநிறுவனங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினர் இணைந்து மீட்பு நடவடிக்கைகள், அவசரதங்குமிடங்கள்மற்றும் உணவு உதவிகள் மூலம் பாராட்டத்தக்க ஆதரவை வழங்கினர். ஆனால் தற்போது, பாதிக்கப்பட்ட சமூகங்கள் பாதுகாப்பான மீள்குடியேற்றத்தையும், நிலையான வாழ்வாதாரத் தீர்வுகளையும் அவசரமாக கோருகின்றனர்.

இந்தச்சூழலில், பாதிக்கப்பட்ட மக்களுடன் நெருக்கமாகச் செயல்படும் சிவில் சமூக அமைப்புகள், வரலாற்று ரீதியாக புறக் கணிக்கப்பட்ட மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. ஏனெனில், புயலால் அவர்களின் பாதிப்புகள் மேலும் தீவிரமடைந்துள்ளன. பேரிடரிற்குப் பின்னர், அரசுத் தலைவர் அநுரகுமார அனைத்துப் பாதிக்கப்பட்டமாவட்டங்களையும்பார்வையிட்டு, வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கவும், நிலம் மற்றும் வீடமைப்பு மானியங்களை விடுவிக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். நுவரெலியா மாவட்டத்தில் உரையாற்றிய போது, மலையகப் பகுதிகளில் உள்ள 611 வீதிகள் தனியார் தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், அவற்றை உள்ளூராட்சி அதிகாரத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், தோட்டக்குடும்பங்களுக்கு நிலம் வழங்குமாறு கோரிய போது, மலையகப் பகுதியில் நிலம் இல்லை என்றும், நிலங்களை இணைந்து தேடலாம் என்றும் அரசுத் தலைவர் தெரிவித்தார்.

தித்வா புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட பதுளை, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் பெரும்பாலும் தோட்டப் பகுதிகளாகும் என்பதும், அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. நாட்டின்தலைவராக, அனைத்துமக்களினதும் நலன் மற்றும் உரிமைகளை பாதுகாப்பது அரசமைப்பிற்கமைய அரசுத் தலைவரின் கடமையாகும். நிலம் இல்லை என்று கூறி அல்லது பொறுப்பை வேறு திசைக்கு மாற்றி தமது கடமையிலிருந்து விலக முடியாது குறிப்பாக முன்பு வழங்கப்பட்ட பொது உறுதிமொழிகளை புறக்கணிக்கலாகாது.

அரசுத் தலைவராகப் பதவி ஏற்கும்முன், ஒரு குடிமகனுக்கு நிலம் இல்லையெனில் குடியுரிமையின் பயன் என்ன? என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார். மேலும், தேசிய மக்கள் சக்தியின் ஹட்டன் பிரகடனத்தில், மலையகத் தமிழ் சமூகத்தின் பிரதான பிரச்சினை வீடமைப்பு நெருக்கடியே. மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (2012ஃ2013) வெளியிட்ட தகவலின்படி, 67.8 சதவீதமான மலையகத் தமிழர்கள் இன்னும் லயன் வீடுகளிலேயே வசிக்கின்றனர் எனக்குறிப்பிட்டுள்ளது.

மேலும் அப்பிரகடனத்தில், வாழத் தகுந்த வீடுகளை உறுதி செய்ய தேசிய வீடமைப்பு திட்டத்தை அமுல்படுத்துதல், தோட்டத் தொழிலை விட்டு வெளியேறும் தொழிலாளர்களை வெளியேற்றுவதைத் தடுத்தல், தங்களின் சொந்த வளங்களை பயன்படுத்தி வீடுகள் கட்டிய குடும்பங்களுக்கு சட்டபூர்வநிலஉரிமைப்பத்திரங்கள்வழங்குதல், மலையக மக்களுக்கு மட்டுமல்லாமல், பிற பகுதிகளில் குடியேறியவர்களுக்கும் நில உரிமைகளை உறுதி செய்தல், பயிரிடப்படாத மற்றும் கைவிடப்பட்ட தோட்ட நிலங்களை இளைஞர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்துதல் உள்ளிட்ட வாக்குறுதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசுத் தலைவர் இந்த வாக்குறுதிகளை மறந்துவிட்டாரா? அல்லது ஆளும்தரப்பு, மலையகத்தமிழ்சமூகத்தின்நிலஉரிமைகளை புறக்கணித்து, தோட்ட நிறுவனங்களின் நலன்களுக்கு முன்னுரிமையளிக்கிறதா? என்ற கேள்வி எழுகின்றது. மேலும் அரசுத் தலைவர் தோட்ட வீதிகள் தொடர்பில், 611 வீதிகள் ஆளும்தரப்பு கட்டுப்பாட்டில் இல்லை என்பதைச்சுட்டிக்காட்டி, தோட்டச்சமூகங்களை பாதுகாக்க அவ்வீதிகளை அரசின்கீழ் கொண்டு வர வேண்டும் என்றார். ஆனால், இது நடைமுறையில் உள்ள சட்டப்பிரிவுகளை புறக்கணிப்பதாகும்.

அதாவது 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபை திருத்தச் சட்டம் இல.15 பிரிவு 2(2) இன் கீழ், தோட்டப் பகுதிகளில் உள்ள பிரதேச சபைகளுக்கு, சிறப்பு நீர்மானம் மற்றும் தோட்ட நிர்வாகத்துடன் ஆலோசனை செய்து, வீதிகள், கிணறுகள் மற்றும் பொதுவான வசதிகளுக்காக நிதி பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பிரிவு 2(3)(0) இன்படி, இவ்வாறு அமைக்கப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்ட வீதிகள் மற்றும் வசதிகள் பிரதேச சபைக்கு உரியதாகி, பொதுச் சொத்துகளாகக் கருதப்படவேண்டும். எனவே இதனைப் பயன்படுத்தி உடனே 611 தோட்ட வீதிகளை அரசின் கீழ் கொண்டு வரலாம்.

மேலும், 2021 ஆம் ஆண்டுக்கான பேரிடர் முகாமைத்துவ மையத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கை, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் தோட்டங்களுக்கு அருகிலான நிலங்களை வீடமைப்பிற்காகப் பெறப் பரிந்துரைக்கிறது. குறிப்பாக, மனித குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய நிலையில், தோட்ட நிலங்கள் தொடர்ந்து பணப் பயிர்களின் விரிவாக்கத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றபோது. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில், அரசால் நியமிக்கப்பட்ட குழு, தோட்டத் துறையில் சுமார் 37,000 ஹெக்டேயார் தரிசு நிலம் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது நினைவுகூறத்தக்கது.

வரலாற்று ரீதியாக, கடந்தகால ஆளும்தரப்புங்கள், சட்டங்களை மீறி தோட்டங்களைத்தனியார்நிறுவனங்களுக்கு வழங்கி நிறுவனங்களுக்கு பயணிக்கும் உப குத்தகை முறைகளை அனுமதித்துள்ளன. ஆகவே வீடமைப்பிற்காக நிலம் பெறுவது, தோட்ட உற்பத்தித்திறனையோ அல்லது நிறுவனங்களின் நிலைபேற்றுத் தன்மையையோ பாதிக்காது. எனவே, ஆளும் தரப்புத்தை நாங்கள் கோருவது யாதெனில் மண்சரிவு பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், மற்றும்மண்சரிவுஅபாயப்பகுதிகளில்வாழும் குடும்பங்களின் வாழ்வாதார தேவைகளை கருத்திற் கொண்டு, அவர்களின் பழைய குடியிருப்புகளுக்கு அருகிலான பாதுகாப்பான இடங்களில் நிலம் வழங்க வேண்டும்.

பாதுகாப்பு மையங்கள் முறையாக மூடப்படும் வரை, பெண்கள் மற்றும் குழந்தைகளின்பாதுகாப்புமற்றும்தனியுரிமை உறுதி செய்யும் வகையில் அவற்றை மறுசீரமைத்துஆண்களுக்கும்பெண்களுக்கும் தனியான இடங்களை ஒதுக்கி தர வேண்டும். 611 தோட்ட வீதிகளையும், பிரதேச சபைச் சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப, உரிய பிரதேச சபைகளின் கீழ் கொண்டு வர வேண்டும். 1987 முதல் பல்வேறு காலகட்டங்களில் தோட்ட தொழிலாளர் குடும்பங்களுக்காக கட்டப்பட்ட 37,000 வீடுகளுக்கு காணி உரிமைப் பத்திரங்களை வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் தோட்ட தொழிலாளர் அல்லாத தோட்டத்தில் வாழும் குடும்பங்களுக்கு, பயன்படுத்தப்படாத லயன் வீடுகள் மற்றும் பொதுக் கட்டிடங்களை தற்காலிகமாக வழங்க உத்தரவிட வேண்டும். பல தோட்டங்களுக்கு மத்தியில் பாதுகாப்பான பொதுக்குடியேற்றங்களை உருவாக்கி, அங்கிருந்து தோட்ட தொழிலாளர்கள் தோட்ட வேலைக்கு அல்லது பணிகளுக்கு செல்லும் வாய்ப்பினை உருவாக்க வேண்டும். இவ்வாறானநடவடிக்கைகளைஎடுக்காவிடின் தோட்டத் துறையிலுள்ள சமத்துவமின்மை மற்றும் புறக்கணிப்பு மேலும் வேரூன்றும். பாதிக்கப்பட்ட அனைத்து சமுகங்களுக்கும் நீதியானசட்டபூர்வமானமற்றும்மனிதாபிமான மீட்பை உறுதிப்படுத்த ஆளும்தரப்புத்துடன் பாகுபாடு கட்டாமல் செயற்படவேண்டும் எனக் கோருகின்றோம் -என்றார்.

## தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்தலைவர்சிவஞானம், பொதுச்செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிறிதரன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்திருந்த பின்னணியில், மாகாணசபைத்தேர்தல்கள் இன்னமும் நடாத்தப்படாமை குறித்தும், அதனை நடாத்துவதற்கான அழுத்தங்களை வழங்கவேண்டியதன் அவசியதையும் வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தை இலங்கைத் தமிழ் அரரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர்கள் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூட்டாகக் கையளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடுமையான தீர்மானங்களே அவசியம்

இலங்கையின்போதைப்பொருள்எதிர்ப்புநடவடிக்கைகளின்முதுகெலும்பாக இருக்கவேண்டிய காவல் போதைப்பொருள் பணியகம் (Police Narcotics Bureau – PNB) இன்று மீண்டும் தவறான காரணங்களுக்காகவே செய்திகளில் இடம்பிடிக்கிறது. நாட்டின் உச்ச போதைப்பொருள் தடுப்பு அமைப்பாக விளங்கிய இந்தப் பிரிவு, கடந்த சில ஆண்டுகளில் தொடர்ச்சியான சர்ச்சைகள், ஊழல் குற்றச்சாட்டுகள், புலனாய்வுக் கசிவுகள் ஆகியவற்றால் தனது நம்பகத்தன்மையை பெரிதும் இழந்துள்ளது. ஒவ்வொரு தடவையும் காவல் போதைப்பொருள் பணியகம் சிக்கலில் அகப்படும்போது, காவல்துறை தலைமையும் பொதுப் பாதுகாப்பு அமைச்சும் வழக்கம்போல 'தலை மாற்றம்' என்ற எளிய மருந்தையே வழங்குகின்றன. அதே காவல் அமைப்புக்குள் இருந்து அதிகாரிகளை மாற்றி நியமித்து, பிரச்சினை தீர்ந்தது போல காட்டுவது, உண்மையில் ஒரு தற்காலிகத் தீர்வாக மட்டுமே இருந்து வருகிறது. ஆனால், பிரச்சினையின் ஆழம் அதைவிடப் பெரிதானது.

காவல் போதைப்பொருள் பணியகத்தில் பணியாற்றிய சில அதிகாரிகளும் தரநிலைப் பணியாளர்களும், காலப்போக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் எளிதில் வளைத்துக்கொள்ளக்கூடியவர்களாக மாறியுள்ளனர். இது காவல் போதைப்பொருள் பணியகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட நோயல்ல; இலங்கை காவல்துறையின் பெரும்பாலான பிரிவுகளையும் தாக்கியுள்ள ஒரு புற்றுநோய் போன்ற நிலை. நீண்ட காலமாக தொடரும் அரசியல் தலையீடுகள், விசுவாசத்தின் அடிப்படையிலான பதவி நியமனங்கள், சட்ட அமலாக்கத்தின் மீது ஏற்பட்ட நம்பிக்கைச் சிதைவு ஆகியவை, காவல்துறையின் கட்டமைப்பையே குற்றவாளிகளின் சுரண்டலுக்கு ஏற்றதாக மாற்றியுள்ளன.

இந்தப் பின்னணியில், சமீபத்தில் வெளிவந்த தகவல்கள் மேலும் கவலைக்குரியவையாக உள்ளன. இலங்கைக்கு போதைப்பொருள் கடத்துவதில் பெரிதும் பயன்படுத்தப்படும் பலநாள் மீன்பிடி கப்பல்களின் கண்காணிப்பு தொடர்பான முக்கிய புலனாய்வு தகவல்கள் கசிந்துள்ளமை, காவல் போதைப்பொருள் பணியகத்தின் பிம்பத்தில் இன்னொரு கரும்புள்ளியைச் சேர்த்துள்ளது. கப்பல் கண்காணிப்பு முறைமை (Vessels Monitoring System – VMS) மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பிற டிஜிட்டல் புலனாய்வு தரவுகள் வெளியேறியதாகக் கூறப்படும் நிலையில், காவல்துறை மா அதிபர் விசாரணையைத் தொடங்கியுள்ளார். வெளிநாட்டு உதவியுடன் நிறுவப்பட்ட இந்த முறைமை, கடற்படை மற்றும் காவல்துறைக்குப் பல முக்கிய போதைப்பொருள் கைப்பற்றல்களைச் செய்ய உதவிய ஒரு சக்திவாய்ந்த கருவியாகும்.

தொடக்கத்தில் மீன்வளத் துறையால் கடுமையாக பாதுகாக்கப்பட்டு வந்த இந்தக் கண்காணிப்பு முறைமை, பின்னர் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக கடற்படையுடன் பகிரப்பட்டது. அதன் பின்னர், சில மூத்த பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கைகளை மீறி, இந்தத் தரவுகள் காவல் போதைப்பொருள் பணியகத்துக்கும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குற்றக் குழுக்களுக்கு எதிராக அரசுக்கு முன்னிலை கொடுத்த இந்த தொழில்நுட்பம், காலப்போக்கில் அவை குற்றவாளிகளின் இலக்காக மாறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்தது. ஆனால், இதனை முன்கூட்டியே கணித்து, எதிர் புலனாய்வு நடவடிக்கைகளை வலுப்படுத்தத் தவறியமை, 'சம்பவம் நடந்த பிறகே பதிலளிக்கும்' மனப்பான்மை இன்னும் சட்ட அமலாக்க அமைப்புகளில் வேரூன்றியிருப்பதை வெளிப்படுத்துகிறது.

இந்தச் சம்பவம், முக்கிய புலனாய்வு மற்றும் தகவல் நடவடிக்கைகளை கையாளுவதற்கு சிறப்பு சோதனைகளுக்குட்பட்ட, நம்பகத்தன்மை உறுதி செய்யப்பட்ட பிரிவுகள் அவசியம் என்பதைக் மீண்டும் நினைவூட்டுகிறது. 2018 ஆம் ஆண்டிலேயே சில வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளும், ஐக்கிய நாடுகள் அமைப்புகளும், இலங்கையின் சட்ட அமலாக்க அமைப்புகளில் இத்தகைய 'வெட்டிங்' செய்யப்பட்ட பிரிவுகள் தேவை என்று சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால், அந்த எச்சரிக்கைகள் பெரும்பாலும் நடைமுறை நடவடிக்கைகளாக மாறவில்லை.

கப்பல்களின் கண்காணிப்பு முறைமையைச் சுற்றி மீண்டும் மீண்டும் நம்பிக்கைச் சிதைவுகள் ஏற்பட்டபோதும், காவல்துறை இதுவரை முழுமையான, பல முனை அணுகுமுறையை உருவாக்கத் தவறியுள்ளது. இருப்பினும், தற்போதைய நிர்வாகத்தின் கீழ், பாதிக்கப்பட்ட அல்லது குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசியல் மனப்பாங்கு காணப்படுவது, ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றமாகவே பார்க்கப்படவேண்டும். 2021ஆம் ஆண்டில் மட்டும், 13 கண்காணிப்பு அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் என்று கைது செய்யப்பட்ட சம்பவம், பிரச்சினையின் ஆழத்தையும் தீவிரத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. கடந்த சில ஆண்டுகளில், ஓய்வுபெற்ற மற்றும் பணியில் உள்ள காவல் மற்றும் ஆயுதப்படை உறுப்பினர்களும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளமை, அமைப்பு ரீதியான சுத்திகரிப்பு எவ்வளவு அவசியம் என்பதைக் கூறுகிறது. இவர்கள்தான் போர் வெற்றியின் கதாநாயகர்களாகவும் கொண்டாடப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.

இத்தகைய புலனாய்வு கசிவுகள் மற்றும் அமைப்புச் சிதைவுகள், உள்நாட்டு குற்றக் குழுக்களுக்கு மட்டுமல்ல; வெளிநாட்டு தீய சக்திகளுக்கும், இலங்கையின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறுகின்றன. இதன் விளைவாக, அரச அமைப்புகள் தத்தமது சைலோக்களில் அடைபட்டு, முக்கிய தகவல்களைப் பகிர்வதில் தயக்கம் காட்டும் நிலை உருவாகிறது. மேலும், பிராந்திய மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள், இலங்கையுடன் நேர்மையான தகவல் பகிர்வில் தயங்கும் அபாயமும் உள்ளது.

இந்த நிலையில், 'சுத்தமான இலங்கை' என்ற கருத்து வெறும் அரசியல் முழக்கமாக இல்லாமல், சட்ட அமலாக்க அமைப்புகளின் உள்ளேயும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதன் தொடக்கம், காவல் போதைப்பொருள் பணியகத்திலிருந்தே தொடங்கவேண்டும். நம்பகத்தன்மையும் நேர்மையும் மீட்கப்படாவிட்டால், சட்டம் ஒழுங்கை ஆளும்தரப்பு கையில் வைத்திருக்க முடியாத நிலை உருவாகும். இன்று எடுக்கப்படும் கடுமையான தீர்மானங்களே, நாளைய பாதுகாப்பை நிர்ணயிக்கும்.

# தையிட்டியில் பொலிஸாரின் நடத்தை நாடு இரண்டுபட்டுள்ளதை காட்டுகிறது

## தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவிப்பு

தையிட்டியில் பொலிஸார் நடந்து கொண்ட விதம் , நாடு இரண்டாக பிளவு பட்டுள்ளது என்பதனை பட்டவர்த்தனமாக காட்டி நிற்கிறது என தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற அமைதி வழி போராட்டத்தின் போது, பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர்.

மதகுருவானவேலன்சுவாமியைமிலேச்சத்தானமாக தாக்கி , அவரை காட்டுமிராண்டி தனமாக இழுத்து சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றியுள்ளனர்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனையும் தள்ளி விழுத்தியுள்ளனர். அத்துடன் , வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூவர் உள்ளிட்ட நால்வரை அடித்து இழுத்து சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றி அராஜகம் செய்துள்ளனர்.

இந்த பொலிசாரின் அராஜகத்தை தமிழ் மக்கள் கூட்டணி மிக வன்மையாக கண்டிக்கிறது.

பொலிசாரின் இந்த செயற்பாடானது நாடு இரண்டாக பிளவு பட்டு உள்ளமையையே காட்டி நிற்கிறது. எத்தனை ஆட்சிகள் மாறினாலும் , சிங்கள பௌத்த தீவிரவாத போக்கில் மாற்றம் ஏற்பட போவதில்லை.

திருகோணமலையில் புத்தர் சிலையை வைத்தமை தொடர்பிலான பிரச்சனையின் போது பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் அதிகாரியை கன்னத்தில் அறைந்தார். அதற்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காது அமைதி காத்தனர். ஆனால் வேலன் சுவாமிகளை மிலேச்சத்தானமாக தாக்கி கைது செய்துள்ளனர். வேலன் சுவாமி ஒரு பௌத்த பிக்குவாக இல்லாதமை தான் இதற்கு காரணம். வேலன் சுவாமிகளுடன் நடந்து கொண்டது போன்று , ஒரு பௌத்த பிக்குவுடன் பொலிஸாரினால் நடந்து கொள்ள முடியுமா?

வேலன் சுவாமி, வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் தம் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்திற்கு எதிராக வழக்கு தொடர வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அவர்கள் அவ்வாறு பொலிஸாருக்கு எதிராக வழக்கு தொடர விரும்பின் , சட்டத்தரணி என்ற ரீதியில் நாமும் எமது கட்சியும் பக்க பலமாக அவர்களுக்காக நிற்போம் என இவ்விடத்தில் உறுதி கூறுகிறேன்.

அதேவேளை, வலி. வடக்கு பிரதேச சபையிடமும் அன்பான கோரிக்கை ஒன்றினை விடுகிறேன், உங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் சாதாரண குடிமகன் ஒரு கட்டடத்தை அமைக்கும் போது , பிரதேச சபையின் அனுமதி பெறாது விடின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்றீர்கள் , அதேபோன்று தையிட்டி விகாரையில் நடைபெறும் சட்ட விரோத கட்டடங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கோருகிறேன் என தெரிவித்தார்.

# 'அஸ்வெசும' புதுப்பித்தல் காலம் டிசெம்பர் 31 முடிவடைகின்றது

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அனைவரும் தமது தகவல்களைப் புதுப்பிப்பதற்கான கால அவகாசம் டிசெம்பர் 31 நிறைவடைவதாக நலன்புரி நன்மைகள் சபை நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ்தற்போதுகொடுப்பனவுகளைப்பெற்று வருபவர்கள் மட்டுமன்றி, விண்ணப்பித்தும் இதுவரை கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் என அனைவரும் இந்தத் தகவல்களைப் புதுப்பித்தல் கட்டாயமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்ட விதிகளுக்கு அமைவாக, கொடுப்பனவுகளைப்பெறுவதற்குத்தகுதியுடையவர்களின் பெயர்ப் பட்டியலை ஆண்டுக்கு ஒருமுறை மீளாய்வு செய்து புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். அந்த சட்ட ரீதியானதேவையினைப்பூர்த்திசெய்யும்பொருட்டே இந்தத் தகவல் புதுப்பிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. குறித்த காலப்பகுதிக்குள் தகவல்களைப் புதுப்பிக்கத் தவறும் நபர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் நிறுத்தப்படும்.

தகவல்களைப் புதுப்பிப்பதற்கான இறுதித் திகதி டிசம்பர் 31 என நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், எக்காரணம் கொண்டும் இந்தக் கால எல்லை மேலும் நீடிக்கப்படமாட்டாது. இதுவரை இச்செயற்பாட்டை முன்னெடுக்காதவர்கள் விரைவாகச் செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயனாளிகள் தமது தகவல்களைப் புதுப்பிப்பதற்குப் பல்வேறு இலகுவான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று நேரடியாகவோ அல்லது கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக 'அஸ்வெசும' உத்தியோகத்தர்களின் தொழில்நுட்ப உதவியைப் பெற்று இணையம் வழியாகவோ தகவல்களைப் புதுப்பிக்க முடியும்.

மேலும், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட 'அஸ்வெசும' விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களில் உள்ள நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவிடம் கையளிப்பதன் மூலமும் அல்லது அருகிலுள்ள தொலைத்தொடர்பு மத்தியநிலையங்களுக்குச் சென்று இணைய வசதியைப் பயன்படுத்துவதன் மூலமும் இச்செயற்பாட்டை நிறைவு செய்ய முடியும்.

'அஸ்வெசும' முதற்கட்டப் பயனாளிகள் அனைவரும் தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது தகவல்களைப் புதுப்பித்துத் தொடர்ச்சியான நலன்புரி உதவிகளைப்பெற்றுக்கொள்ளுமாறு நலன்புரி நன்மைகள் சபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# 'பிக்மீ', 'உபர்' சாரதிகள் மீது எல்ல பகுதியில் தாக்குதல்

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் எல்ல பகுதியில், வெளிமாவட்டங்களிலிருந்து பயணிகளை ஏற்றி வரும் 'பிக் மீ' (ஊணஷ்உவ னிஉள) மற்றும் 'உபர்' (ஷீணுளஷ) போன்ற தனியார் வாடகை வாகனச் சேவை சாரதிகள் மீது அங்கிருப்பவர்கள்தாக்குதல் நடத்தியதுடன், அவர்களுக்குச் சாதகமாகச் செயற்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எல்ல சுற்றுலாப் பகுதிக்கு பயணிகளுடன் வரும் பிக் மீ மற்றும் உபர் வாகனச் சாரதிகளை, அந்தப் பிரதேசத்தில் உள்ள உள்ளூர் வாடகை வாகனச் சாரதிகள் அச்சுறுத்துகின்றனர் எனவும், அவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் எனவும் எல்ல பொலிஸ் நிலையத்திற்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் எல்ல பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். இதற்கிடையில், எல்ல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள், வெளிப்பிரதேசத்திலிருந்து வந்த வாடகை வாகனச் சாரதி ஒருவரை நோக்கி 'எல்ல பகுதியில் வாடகை வாகனச் சேவையில் ஈடுபட வேண்டாம்' என எச்சரிக்கும் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

குறித்த காணொளித் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை (19) முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவின் பேரில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.அதற்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் உடனடியாக அமுழுக்கு வரும் வகையில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு ஞாயிற்றுக்கிழமை (21) அன்றும் எல்ல பொலிஸ் பிரிவில் பிக் மீ , உபர் சாரதி ஒருவரைத் தாக்க முயன்று, அவரது கார் மீது தாக்குதல் நடத்தி சேதம் விளைவித்தமை தொடர்பிலும், மற்றுமொரு பெண் சாரதி மீது தாக்குதல் நடத்தி பணத்தைக் கொள்ளையிட்டமை தொடர்பிலும் இரு தனித்தனி முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எல்ல பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில், காரைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்களும், பெண் சாரதியைத் தாக்கி பணத்தைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இராச்சியத்திற்கு எதிரான சட்டவரைவை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்

## ஊடகவியலாளர் சங்கம் கண்டித்து அறிக்கை

பயங்கரவாதத்திலிருந்து அரசைப்பாதுகாக்கும் சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மிகமோசமான, ஆபத்தான சரத்துக்கள், அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் சுதந்திரம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள்சார் கடப்பாடுகள் என்பன புறந்தள்ளப்பட்டு, எவ்வாறேனும்அரசஅதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்குமாத்திரமேமுன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதனைக் காண்பிப்பதாகக் கண்டனம்வெளியிட்டுள்ள இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், உண்மையிலேயே ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பதாக இருந்தால், இந்த ஜனநாயக விரோத சட்டவரைவை ஆளும்தரப்பு உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்' எனும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமானநடவடிக்கைகள் ஆளும்தரப்புத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டவரைவு குறித்து இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாதத்திலிருந்து அரசைப்பாதுகாக்கும் சட்ட வரைபை முன்மொழிந்திருப்பதன் ஊடாக இப்போது பகுதியளவில் மாத்திரம் பாதுகாக்கப்படும் ஜனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி, வரலாற்றின் இருண்ட பக்கங்களுக்கு மீண்டும் நாட்டைஇழுத்துச்செல்வதற்கானஆளும்தரப்புத்தின் முயற்சியை தீவிர கரிசனையுடன் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வரைவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மிகமோசமான, ஆபத்தான சரத்துக்கள், அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள இந்நாட்டுமக்களின் சுதந்திரம் மற்றும் இலங்கை கொண்டிருக்கும் சர்வதேச மனித உரிமைகள்சார் கடப்பாடுகள் என்பன புறந்தள்ளப்பட்டு, எவ்வாறேனும் அரச அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்குமாத்திரமேமுன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதனைக் காண்பிக்கின்றன. தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இவ்வரைவை கடந்த ஒகஸ்ட் மாதமளவில் வெளியிடுவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், குறிப்பிட்டளவு காலதாமதத்தின் பின்னர், பேரனர்த்தத்தை அடுத்து அவசரகாலநிலை நடைமுறையில் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் வெளியிட்டிருப்பது பல்வேறு கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.

இதுகுறித்து ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதற்கு ஒருமாத காலஅவகாசம் வழங்கப்பட்டிருப்பினும், மிகமோசமான பேரனர்த்தத்தின் பின்னர் மக்கள் இவ்வரைவு தொடர்பில் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடுவர் என எதிர்பார்க்கமுடியாது. இது மேற்படி வரைவின் கரிசனைக்குரிய உள்ளடக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை மேலும் தீவிரப்படுத்துகின்றது. அதுமாத்திரமன்றி இவ்வரைவு மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய மிகவும் ஆபத்தான சரத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றது.

இவ்வரைவில் 'பயங்கரவாதம்' எனும் பதத்துக்கு கரிசனைக்குரிய விதத்தில் மிகப்பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் இச்சட்டத்தின்கீழ் குற்றமாகக் கருதப்படக்கூடிய ஆபத்து உள்ளது. அதுமாத்திரமன்றி நீண்டகாலத் தடுத்துவைப்பு, சட்ட அமுலாக்க செயன்முறையில் இராணுவமயமாக்கம், நிறைவேற்றதிகாரத் துஷ்பிரயோகம், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் மீதான ஒடுக்குமுறை போன்றவற்றுக்கும் இச்சட்டம் வழிவகுக்கும்.

எனவே உண்மையிலேயே ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பதாக இருந்தால், இந்த ஜனநாயக விரோத சட்டவரைவை உடனடியாக வாபஸ் பெறுமாறு ஆளும்தரப்புத்தை வலியுறுத்துகின்றோம். அத்தோடு இந்த ஆபத்தான வரைவை எதிர்ப்பதற்கு ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சகலரும் ஒன்றுபடவேண்டும் என அவ்வறிக்கையில் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

# தரமான மருந்து ஆய்வகத்தை நிறுவ எடுத்த நடவடிக்கை என்ன?

## ஆளும்தரப்பிடம் சஜித் கேள்வி

உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைக் கொண்ட ஆய்வக வசதிகள் நாட்டில் காணப்படுகின்றனவா? உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வகவசதிகளை நிறுவுவதற்கு ஆளும்தரப்பு இரண்டு வரவு செலவுத் திட்டங்கள் ஊடாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இந்தக் கேள்விகளுக்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

குமட்டல், வாந்தி, தலைச்சுற்று என்பனவற்றைக்குறைப்பதற்கும் தடுப்பதற்கும் கொடுக்கப்பட்ட தடுப்பூசிகளில் நச்சுத்தன்மை ஏற்பட்டதால், ஹபரகட மற்றும் மத்துகம பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பெண்கள் ஐ.டி.எச்.வைத்தியசாலையில் கடுமையாக சுகவீனமுற்று பின்னர் உயிரிழந்தனர். நாம் அறிந்த வகையில் கண்டி வைத்தியசாலையில்நடத்தப்பட்ட முதற்கட்ட நுண்ணுயிரியல் பரிசோதனையில் இந்த தடுப்பூசிகளில் பக்டீரியாக்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இந்தத் தகவலுடன், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, வைத்தியசாலை கட்டமைப்பிலிருந்து 270,000 இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகளைபாவணையிலிருந்து நீக்குமாறு அறிவித்துள்ளது.

இந்தத் தகவலின் உண்மைத்தன்மையை சுகாதார அமைச்சரும் ஆளும்தரப்புமும் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இந்த தடுப்பூசி கொள்வனவு அவசர கொள்வனவா ? அதன் தரம் பரிசோதிக்கப்பட்டதா? அவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளின் முடிவுகள் எத்தகையன என்பது தொடர்பில்நாம்தெரிந்துகொள்ள வேண்டியுள்ளன. நமது நாட்டில் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளின் தரத்தை பரிசோதிக்கும் வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இரண்டு உயிர்கள் பலியாகிய சம்பவங்கள் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வைத்த கருத்துக்களுக்கு ஆளும்தரப்புத்தின் பதிலை அறிய விரும்புகிறோம்.

உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைக் கொண்ட ஆய்வக வசதிகள் நமது நாட்டில் காணப்படுகின்றனவா என்பதையும், உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வக வசதிகளை நிறுவுவதற்கு ஆளும்தரப்பு இரண்டு வரவு செலவுத் திட்டங்கள் ஊடாக எடுத்த நடவடிக்கைகளை முன்வைக்குமாறும், இந்தக் கேள்விகளுக்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டும். சேனக பிபிலே மருந்துக் கொள்கையை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள்கூட்டணியும்முழுமையாக ஏற்றுக்கொள்கின்றன.

தரமற்ற மருந்துப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஊழலை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கூட நாம் முன்வைத்துள்ளோம். இதற்காக வைத்தியர் சமல் சஞ்சீவவும் காவிந்த ஜயவர்தனவும் பாரிய போராட்டத்தை நடத்தி வந்தனர். அவ்வாறிருந்த போதிலும் அண்மையில், தவறான செய்திகளைப் பரப்பி, மருந்துகள் தொடர்பில் அவர்கள் முன்வைத்த கருத்துக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் கருத்து அல்ல என சுட்டிக்காட்டப்பட்டன. இந்நாட்டில் தரமற்ற மருத்துவ மோசடி நடைபெற்று வரும் வேளையில், சேனக பிபிலேவின் கொள்கையை பெயரளவில் மட்டுமே ஏற்றுக்கொண்டவர்கள் போலிச்செய்திகளை உருவாக்கி வருகின்றனர்.

இந்த தடுப்பூசிகளால் ஏற்பட்ட இரண்டு மரணங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு, நாட்டில் தரமற்ற தடுப்பூசி மாபியாவின் தொடர்ச்சியான செயல்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், சுகாதார அமைச்சர் என்ற முறையில் தனது பொறுப்புகளை அவர் புறக்கணித்தவராக கருதப்படுவார். 220 இலட்சம் மக்களின் சுகாதாரத்தை மனித உரிமையாகும் அடிப்படை உரிமையாகவும் கருதும் ஐக்கிய மக்கள்சக்தி இந்ததரமற்றதடுப்பூசி விவகாரத்துக்காக இன்றும் குரல் கொடுக்கும் என்றார்.

## அம்பலாங்கொடையில் அதிகாலை

# பாதாளக் கும்பலால் நேற்று ஒருவர் சுட்டுப் படுகொலை

அம்பலாங்கொடை நகரில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்திருந்த அடையாளம் தெரியாத சந்தேகநபர்கள் இருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பிரபல வீட்டு உபகரணக் காட்சி அறையின் முகாமையாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகக் குழு செயற்பாட்டாளரான லொக்கு பெட்டியின் தரப்பினரால் இந்தக் குற்றச்செயல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அம்பலாங்கொடை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அம்பலாங்கொடை நகரில் உள்ள பிரபல வீட்டு உபகரணக் காட்சி அறை ஒன்றிற்கு நேற்று காலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்திருந்த அடையாளம் தெரியாத சந்தேகநபர்கள் இருவர், நபர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். படுகாயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தலைக்கவசத்துடன்வந்த பிரதானதுப்பாக்கிதாரி காட்சி அறைக்குள் நுழைந்து குறித்த நபர் மீது ஒருமுறை துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறி, மீண்டும் அறைக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்திய காட்சி அங்கிருந்த சி.சி.டி.வி கேமராக்களில் பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற பிரபல வீட்டு உபகரணக் காட்சி அறையின் முகாமையாளராகப் பணிபுரியும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்றுகாலை8.30மணியளவில்துப்பாக்கிதாரிகளால் அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் 44 வயதுடைய அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ ஹிரான் கோசலத சில்வா எனத் தெரியவந்துள்ளது. மேலும், சம்பவத்தையடுத்து அங்கிருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர்கள் தமது மோட்டார் சைக்கிளை அம்பலாங்கொடைகருவாத்தோட்டம் ஆதாகொட வீதியின் ஓரத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர். இந்நிலையில், நேற்றைய தினமே மேற்படி மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் இரு குற்றக் கும்பல்களுக்கும் இடையில் நிலவி வரும் மோதல் காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றக் கும்பலுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தவர் எனவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஒருங்கமைத்துக் கொடுத்து வந்தவர் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய, இவர் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மனிதப் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலும், பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர்களான பொடி லெசி, கரந்தெனிய சுத்தா மற்றும் கொஸ்கொட சுஜி ஆகியோரின் நெருங்கிய ஆதரவாளராகச் செயற்பட்டுள்ளதாகவும் விசாரணையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. அத்துடன் உயிரிழந்த நபர் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி சார்பாக அம்பலாங்கொடை நகரசபைத் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகக் குழு செயற்பாட்டாளரான லொக்கு பெட்டியின் தரப்பினரால் இந்தக் குற்றச்செயல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குற்றச்செயலுக்காக சந்தேகநபர்களால் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி தொடர்பான விபரங்கள் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், தப்பியோடிய சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்காக தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பொலிஸாரைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது ஆனால் எந்த குற்றச்சாட்டுக்களும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

ராஜபக்சர்களுக்குச் சொந்தமான ஐஸ் போதைப்பொருள் தொழிற்சாலை நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இருப்பதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களுக்கும் எந்த நேர்ந்தது என்றும் தெரியவில்லை. தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான காணியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் பரிசோதகர் மீது ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளார். இதுவரையில் அந்த அரசியல்வாதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பொலிஸார் மீது ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதற்கு பொலிஸ்மா அதிபருக்கு வெட்கம் என்பது கிடையாதா, பொலிஸ்மா அதிபர் அரசியல் நோக்கத்துடன் செயற்படுவது வெறுக்கத்தக்கது - என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, டிசெம்பர் 21 முதல் 22 வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் வளி மண்டலம் அதிகளவில் மாசடைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. காற்றின் தரம் குறைவடைந்துள்ளதால் நீண்டகாலச் சுவாச நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுத் திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நாட்பட்ட சுவாச நோயாளிகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு திடீர் மூச்சுத் திணறல் அல்லது சுவாசக் கோளாறு ஏற்படுமாயின் தாமதிக்காது உடனடியாக வைத்தியசாலையை நாடுவது அவசியம்.

நாட்டின் எல்லைப் பகுதிக்குள் நிலவும் காற்றுச்சுழற்சி மற்றும் வடகிழக்கு பருவமழை ஆரம்பித்துள்ளமை ஆகிய இயற்கைக் காரணிகளால் காற்றின் தரம் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், காற்று மாசடைவதற்கு மனித நடவடிக்கைகளே முக்கிய காரணமாக அமைகின்றன. தேவையற்ற முறையில் தீ மூட்டுதல், வாகனங்களில் இருந்து வெளியேறும் அதிகப்படியான புகை மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரித்தல் போன்ற செயற்பாடுகளால் வளி மண்டலம் மேலும் மாசடைகின்றது. ஆகையால் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். தற்போதுள்ள நிலைமை குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபை காற்றின் தரக் குறியீட்டைத் தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், வளி மண்டலத்தின் தரம் குறித்து அவதானித்து வருகிறது என்றார்.

## புதிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வது பயங்கரவாதமாக கருதப்படும்.

பயங்கரவாதத்துக்கு இந்தச் சட்டவரைவு ஊடாக தெளிவற்ற விளக்கமளிக்கப்படுமாயின் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயக அம்சங்களுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டங்கள், பணிப்புறக்கணிப்புக்கள் மக்களை அச்சமூட்டும் செயற்பாடுகளாக கருதி அவை பயங்கரவாதத்துக்குள் உள்வாங்கப்படும்.

அதேபோல் மனிதப்படுகொலை, சித்திரவதைக்கு உள்ளாக்குதல், பிணைக் கைதிகளாக வைத்துக்கொள்ளல், சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை தம்வசம் வைத்திருத்தல் ஆகிய சகல குற்றங்களும் சாதாரண தண்டனைச் சட்டக்கோவைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தண்டனைச் சட்டக்கோவைக்குள் உள்ளடக்கப்படாத விடயங்களே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அதனையே நாங்கள் எதிர்பார்த்தோம். இருப்பினும் அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

அதேபோல் ஆளும்தரப்புக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அழுத்தம் பிரயோகிப்பது குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு மற்றும் அரசு என்பது வெவ்வேறானது. ஆளும்தரப்புக்கு எதிராக போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். அவர்கள் சிவில் மக்களைப் படுகொலை செய்யமாட்டார்கள்.

பயங்கரவாதிகள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவார்கள். மக்களையும் படுகொலை செய்வார்கள். ஆளும்தரப்பு மற்றும் அரசு தொடர்பில் இந்தச் சட்டவரைவில் போதுமான விளக்கம் வழங்கப்படவில்லை.

பயங்கரவாதத்தில் இருந்து இராச்சியத்தை பாதுகாக்கும் சட்டவரைவின் கோட்பாடு தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இது பிரதான பிரச்சினையாகும். ஆகவே இந்தச் சட்டவரைவு தொடர்பில் ஆளும்தரப்பு வெளிப்படையாக செயற்படவேண்டும் - என்றார்.

## சி.ரி.ஸ்கானர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்குச் சாதகமாகத் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளைத் தயாரித்து, பொதுமக்களின் வரிப்பணத்தை மோசடி செய்ய தொழில்நுட்ப கொள்முதல் குழு முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு ஒரு மெமோகிராம் இயந்திரத்தையும், அவிசாவளை மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு ஒரு சி.டி. ஸ்கேன் இயந்திரத்தையும் கொள்வனவு செய்ய மேல் மாகாண சபை அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காகச் சுமார் 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்களின் தரம் மற்றும் தொழில்நுட்பத் துல்லியம் குறித்து ஆராய வேண்டிய தொழில்நுட்பக் குழுவில், தகுதியுள்ள கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை.

இக்கொள்முதல் நடவடிக்கையில் உள்ள குளறுபடிகள் காரணமாக, அக்குழுவில் இருந்த விசேட வைத்திய நிபுணர் ஒருவரும் ஏற்கனவே அதிலிருந்து விலகியுள்ளார். ஒரு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் தரம் குறித்து நடுநிலையான தொழில்நுட்ப விவரங்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய குழு தமக்கு நெருக்கமான சில நிறுவனங்களுக்கு ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், அந்த நிறுவனங்களின் இயந்திரங்களுக்குப் பொருந்தும் வகையில் விவரக் குறிப்புகளை மாற்றியமைத்துள்ளது.

இதன் மூலம் பொதுமக்களின் பெருமளவிலான பணம் மோசடிக்காரர்களால் வீணடிக்கப்படவுள்ளது. எனவே, மேல்மாகாண சபையின் இந்த அவசரக் கொள்முதல் குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும். நோயாளர்களுக்குத் துல்லியமான பரிசோதனைகளை உறுதிப்படுத்தும் வகையில் தகுதியான நிபுணர்களைக் கொண்ட புதிய குழு நியமிக்கப்பட வேண்டும். அத்துடன், இந்த மோசடியில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராகச் சுகாதார அமைச்சு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ். தேவி தொடருந்தும் நாளை காலை 6.40 மணியவில் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தை நோக்கி புறப்பட்டு, பகல் 2.32 மணியளவில் காங்கேசன்துறை தொடருந்து நிலையத்தைச் சென்றடையவுள்ளது.

அதேபோல் அன்றைய தினமே (நாளை) காலை 10.30 மணியளவில் காங்கேசன்துறை தொடருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் தொடருந்தும் மாலை 06.54 மணியளவில் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தை வந்தடையவுள்ளது.

காங்கேசன்துறை - அநுராதபுரம் வரையிலான யாழ்ராணி தொடருந்து சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பேரிடருக்கு பின்னர் குறுகிய காலப்பகுதியில் வடக்குக்கான தொடருந்து சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை- மட்டக்களப்புக்கான தொடருந்து சேவை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தொடருந்து திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com



# இடர் உதவி வழங்கல் குறித்து புதிய சுற்றறிக்கை வெளியீடு

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பேரிடர் நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக்கொண்டுவருவதற்கு 2025.12.05 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மூலம் முன்மொழியப்பட்ட வலுவூட்டல் நிகழ்ச்சித்தில் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை மிகவும் திறமையாகவும், திறம்படவும் செயற்படுத்துவதற்காக புதிய சேர்த்தல்கள், தெளிவுப்படுத்தல்கள் மற்றும் திருத்தங்களை உள்ளடக்கியவகையில்வரவுசெலவுத்திட்டசுற்றறிக்கை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

மீனவர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள், வணிக கட்டிட உரிமையாளர்கள், வீட்டு உரிமையாளர்கள் ஆகியோருக்கும் மத தலங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகைவிபரங்கள்திருத்தம்செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய டிசெம்பர் 5 வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் 3,5,6,7,9,11,12 மற்றும் 14 ஆகிய தொடர்கள் புதிய சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்டுள்ளன.

மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக வீடுகளை இழந்தஅல்லதுநிரந்தரவாழ்வாதாரத்தைதொடரமுடியாத குடும்பங்களுக்கு அதிகபட்சமாக 3 மாத காலங்களுக்கு 25 ஆயிரம் ரூபா உதவித்தொகை (02 அல்லது அதற்கு குறைவான உறுப்பினர்களை கொண்டிருத்தல்), 50 ஆயிரம் ரூபா (02 உறுப்பினர்களுக்கு மேலதிகமான உறுப்பினர்களை கொண்டிருத்தல்) வழங்கப்படும்.

**விவசாய பயிர்ச்செய்கைக்கான உதவித்தொகை**

பேரிடர்த்தால் பாதிக்கப்பட்ட நெல், தானியம், சோளம், வேர்க்கடலை மற்றும் களப் பயிர் சேதம் அல்லது மீள் நடுகைக்காக ஒரு முறை மாத்திரம் ஒரு ஹெக்டயாருக்கு 150,000 ரூபா வழங்கப்படும்.

அதேபோல் காய்கறி, மிளகாய்,வெங்காயம் மற்றும் வாழைப்பழம், பப்பாசி,அன்னாசி போன்ற பழப் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு அல்லது மீள்நடுகைக்கு ஒருமுறை மாத்திரம் 150,000 ரூபா வழங்கப்படும்.

**விலங்கு வேளாண்மைக்கான உதவித்தொகை**

பேரிடரினால்பாதிக்கப்பட்டகால்நடைபண்ணைகளில் இறந்தவிலங்குகளின்எண்ணிக்கையின்அடிப்படையில் (பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்களுக்கு மட்டும்) கொடுப்பனவு வழங்கப்படும்.

அதற்கமைய கால்நடை வளர்ப்பில் (கலப்பின) இறந்த விலங்கு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபா,அதிகபட்சம் 10 விலங்குகளுக்கு 20 இலட்சம் ரூபா,

கால்நடை வளர்ப்பில் (உள்ளூர்) இறந்த விலங்கு ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபா, அதிகபட்சம் 20 விலங்குகள் வரை உயிரிழந்திருந்தால் 10 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும்.

**பன்றி வளர்ப்பு**

.இறந்த விலங்கு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா, அதிகபட்சம் 20 விலங்குகள் வரை உயிரிழந்திருந்தால் 4 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

**ஆடு / செம்மறி ஆடு வளர்ப்பு**

இறந்த விலங்கு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா,20 விலங்குகள் வரை உயிரிழந்திருந்தால் 4 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

**கோழி வளர்ப்பு லேயர், பொய்லர்**

இறந்த கோழி (லேயர்) ஒன்றுக்கு 500 ரூபா என்ற அடிப்படையில் அதிகபட்ச கொடுப்பனவாக 10 இலட்சம் வரை வழங்கப்படும். பொய்லர் கோழி ஒன்றுக்கு 250 ரூபா என்ற வகையில் 10 இலட்சம் ரூபா வரை வழங்கப்படும். அதேபோல் வீட்டுக் கோழி வளர்ப்பில் அலகொன்றுக்கு ஒரு முறை மாத்திரம் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

**சேதமடைந்த மீன்பிடித் தொழிலை கட்டியெழுப்பல்**

பேரிடரினால் சேதமடைந்த உவர் நீர் மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படும் படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரணம் வழங்கப்படும். முழுமையாக சேதமடைந்த மீன்பிடிபடகுக்கு பெறப்பட்ட காப்புறுதி இழப்பீட்டை சீனோர் நிறுவனத்துக்குச் செலுத்துவதற்குட்பட்டு அந்நிறுவனத்தின் மூலம் புதிய படகுகள் வழங்கப்படும்.

பகுதியளவில்சேதமடைந்தமீன்பிடிபடகுகள்சீனோர் நிறுவனத்தின் மூலம் பழுதுபார்க்கப்படும்.மீன்பிடி வலைகளைஇழந்தமீனவர்களுக்குவலைகளைகொள்வனவு செய்வதற்காக நோர்த் சீ லிமிடெட் ஒரு முறை மாத்திரம்ஒருமீனவருக்கு1இலட்சம்ரூபாபெறுமதியான கூப்பன் பத்திரம் ஒன்று வழங்கும்.

முழுமையாகசேதமடைந்தபடகுக்கு(நன்னீர்மீன்பிடி நடவடிக்கை)ஒருமீனவருக்குஒருமுறைமாத்திரம்1இலட்சம் ரூபா வழங்கப்படும். பகுதியளவில் சேதமடைந்த படகு சீனோர் நிறுவனத்தின் மூலம் பழுதுபார்க்கப்படும்.

அதேபோல்சேதமடைந்தவலைக்குஒருமீனவருக்கு அதிகபட்சமாக 5 வலைகள் என்ற அடிப்படையில் சேதமான வலைக்கு 15 ஆயிரம் ரூபா, அதிகபட்சமாக 75 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

**வணிகக் கட்டிட உரிமையாளர்களுக்காக உதவித்தொகை**

சேத மதிப்பீடு இல்லாமல் இழப்பீடு பெற விருப்பம் தெரிவிக்கும் வணிக உரிமையாளர் ஒருவருக்கு 5 இலட்சம் ரூபா, சேத மதிப்பீட்டுக்குப் பிறகு இழப்பீடு பெற விருப்பம்தெரிவிக்கும்வணிககட்டிட உரிமையாளருக்கு அதிகபட்ச கொடுப்பனவாக 50 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

**வீட்டுக்கான உதவித்தொகை**

முழுமையாக சேதடைந்து, மண்சரிவு அபாயம் காரணமாக வசிக்கத் தகுதியற்றதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு 50 இலட்சம் ரூபா, பகுதியளில் சேதடைந்த வீடுகளை புனரமைக்க 25 இலட்சம் ரூபா,

சேத மதிப்பீடு இல்லாமல் இழப்பீடு பெற விரும்புபவர்களுக்கு 5 இலட்சம் ரூபா,சேத மதிப்பீட்டுக்குப்பிறகு இழப்பீடு பெறவிருப்பம் தெரிவிப்பவர்களுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அதிகபட்ச இழப்பீடாக 25 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

பேரிடரினால் சேதமடைந்த மத தலங்களை துப்பரவு செய்தல் மற்றும் மறுசீரமைப்புசெய்வதற்கு25ரூபாஒருமுறை கொடுப்பனவுமதவிவகாரங்கள்தொடர்பான திணைக்களத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும்.

# கொழும்பு மாநகர சபையின் பாதீடு நேற்றுச் சமர்ப்பிப்பு

தேசிய மக்கள் சக்தி கட்சியின் அதிகாரத்தின் கீழ் இருக்கும் கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவுத்திட்டம் "செல்வமிக்கதொரு நகரில் அழகிய வாழ்க்கை"என்னும் தெ னிப்பெ ருளில் மாநகர மேயர் வ்ராய் கெலி பல்தசாரால் நேற்று திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைய கொழும்பு மாநகரசபைக்கான 2026 ஆம் ஆண்டுக்கான வருமானமாக 28,860மில்லியன்ரூபாவும்செலவீனமாக28,859.மில்லியன்ரூபாவும்மதிப்பிடப்பட்டுள்ளது.

வருமானமாக வரி மற்றும் வாடகை மூலம் 8,697.01 மில்லியன் ரூபாவும் அனுமதிப்பத்திரங்கள் மூலம் 354.81,வசதிகள் மூலம் 2,303.55,அறவிடத்தக்க கட்டணங்கள் மூலம் 9,128.91,வாடகை 439.84,விற்பனை 20.58,வேட்டி 96.40,மில்லியன் ரூபா என மொத்த மீள் வரும் வருமானம்,21,441.10 மில்லியன் ரூபாவும் அரச உதவிகள்,வேறு உதவிகள்,மீள் நிரப்பல்கள் மூலம் 7,210.79, மில்லியன் ரூபா,மூலதனப்பெறுகை 208.00 மில்லியன் ரூபா என்ற அடிப்படியிலேயே மொத்த வருமானமாக 28,859.89 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

செலவீனமாக ஊழியர் செலவீனம் 6,033.71 மில்லியன் ரூபாவும் வழங்கல்கள் 2,536.74,நிறுவன மற்றும் பல்வேறு 4,486.88,நடைமுறை நிதிக்கட்டணம் 61.60,நன்கொடை மற்றும் பங்களிப்பு நிதி 1,045.92, மூலதன சொத்துக்கள் பராமரிப்பு 2,451.60,மூலதன நிதிக்கிரயம் 175.00,மொத்த மீள்வரும் செலவு 16,791.45,மூலதன செலவு 2,715.54,அடித்தள வசதிகள் 9,352.32 மில்லியன் ரூபாவென மொத்த செலவீனம் 28,859.31 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் வரி ,கட்டணத்தை அதிகரிக்கும் பிரேரணைகள் முன்வைக்கப்படாத அதேவேளை தற்போது மதிப்பீடு செய்யப்படாதுள்ள சொத்துக்கள் தொடர்பான மதிப்பிடலை மேற்கொள்வதன் மூலம் வரி வாடகை வருமானத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு வரி வருமானத்தை அதிகரித்தல், வாகனங்களை தரித்து வைக்கும்போது அறவிடப்படும் கட்டண வருமானத்தை 500 மில்லையன் ரூபா வரை அதிகரித்தல், விலங்கு கொலைகள் கட்டணத்தை 40 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல் ,விளையாட்டு மைதானங்கள் நீச்சல் தடாகங்கள்,உடற்பயிற்சி கூடங்கள் மூலமான கட்டணத்தை 16 மில்லியன் ரூபாவாகவும் அங்கத்துவ கட்டணத்தை 11 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்தல்.

விழா மண்டபம்,விளையாட்டு மைதானங்களை வாடைக்கு விடுவதன் மூலம் எதிர் பார்க்கப்படும் வருமானத்தை 75 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல்,வணிக மற்றும் கைத்தொழில் கழிவுகள் சேவைக் கட்டண அறவிடலை முறைமைப்படுத்துவதன் மூலம் 1600 மில்லியன் ரூபா வருமானத்தை பெறல் , வழங்குநர்களை பதிவு செய்வதன் மூலம் 10 மில்லியன் வருமானம் பெறல் , உத்தரவுபத்திரங்கள் , நிரந்தர உத்தரவு பத்திரங்கள் மூலமான வருமானத்தை 30 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல், நீதிமன்ற தண்டப்பணம் உட்பட தண்டப்பண அறவிடல் மூலமான வருமானத்தை 400 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல்,வர்த்தக கழிவுகளை சேகரிப்பதன் மூலமான வருமானத்தை 200 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல் ,

இதுவரை அறவிட முடியாமற்போன காணி கொடுக்கல், வாங்கல் தொடர்பான முத்திரைக்கட்டண வருமானத்தை பெற விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி 7595மில்லியன் ரூபாவை பெறல் ,அதிகாரப்பிரதேசத்திற்கு வெளியே மலக்குழாய் சேவையை வழங்கி 25 மில்லியன் ரூபாவை பெறல், வர்த்தக நிலைய வாடகை வருமானம் முறையாக கிடைப்பதை திட்டமிட்டு அதனை 150 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல், வட்டி வருமானத்தை 450 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல், இறுதி சடங்கு மண்டபங்களை அமைத்து அதன் மூலம் 3 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டல் மற்றும் தகனம்,நல்லடக்க கட்டணத்தை குறைத்தல் ஆகிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முக்கிய செலவுகளாக மாநகர முதல்வர் அலுவலம் உள்ளிட்ட அலுவலகங்களுக்கு 1976 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இதன்படி நகர முதல்வர் அலுவலக செலவிற்காக 10.9 மில்லியன் ரூபா, பிரதி நகர முதல்வர் அலுவலக செலவிற்காக 3.6, மில்லியன் ரூபா,சபை உறுப்பினர்கள் செலவிற்காக 80.5, மில்லியன் ரூபா இதன்கீழ் உறுப்பினர்களுக்கு டெப் அல்லது லப்டப் (மடிக்கணினி )வழங்க 20 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது . ஊழியர் செலவிற்காக 1124 மில்லியன் ரூபாவும் மூலத்தை சொத்து பராமரிப்புக்காக 109 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் மாநகர பொருளாளர் திணைக்களத்திற்கு 20 மில்லியன் ரூபாவும், மதிப்பீட்டாளர் திணைக்களத்திற்கு 20 மில்லியன் ரூபாவும்,மனிதவள திணைக்களத்திற்கு 59 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பொது சுகாதார திணைக்களத்திற்குரிய 7 பிரிவுகளுக்கு 1063 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இதில் டெங்கு ஒழிப்பு மற்றும் ஏனைய நோய்கள் கட்டுப்பாட்டுக்கு 201 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நோய் நிவாரண திணைக்களம் சுதேச வைத்தியத் திணைக்களம் கால் நடை சுகாதார திணைக்களம் என்பவற்றிற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வறுமை நிவாரண உதவிகளுக்காக 175,மில்லியன் ரூபா கல்வி உதவிகளுக்கு 150மில்லியன் ரூபா ,முன்பள்ளி, மறைகல்வி பிள்ளைகளின் இலவச உணவுக்கு 131மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கும் சம்பளத்தை 10000 ரூபாவினால் அதிகரிக்கவும் எதிர் பார்க்கப்படுகின்றது. அத்துடன் குறைந்த வருமானம் பெறும் பெண்களுக்கு இலவச சுகாதார துவாய்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது .வறுமை நிவாரணத்திற்கு 20மில்லியன் ரூபா , சுயதொழில் உதவிக்கு 30 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்திக்கு 792மில்லியன் ரூபா,நகரத்தில் உள்ள குப்பை பிரச்சினையை தீர்க்க 3560 மில்லியன் ரூபாக்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மிகுதி ஏனைய விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

# பெலியத்த பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருக்குப் பிணை

*பெலியத்த பிரதேச சபையின் தவிசாளராக கடமையாற்றியக் காலப்பகுதியில் தனது வருமானத்தை மீறி சுமார் 36 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சொத்துக்களை முறையற்ற விவத்தில் சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெலியத்த பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சிறில் முனசிங்க கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.*

*அதற்கமைய தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் சந்தேகநபரை நீதிவான் விடுவித்திருந்தார்.*

*பெலியத்த பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சிறில் முனசிங்க, வருமானத்திற்கு அதிகமாக 360 இலட்சம் ரூபா (36 மில்லியன்) பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பணத்தை ஈட்டியதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் டிசெம்பர் 12 கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த 2012ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 வரை பெலியத்த பிரதேச சபையின் தவிசாளர் காலப்பகுதில் தனது சட்டபூர்வ வருமானத்தை விஞ்சிய வகையில் 36 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்களை ஈட்டியதன் மூலம், இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*32 வருடங்களாக பெலியத்த பிரதேச சபையின் உறுப்பினராகவும், 2012 முதல் 2023 வரை அந்தச் சபையின் தவிசாளராகவும் பணியாற்றிய சந்தேகநபர், ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு உட்பட்ட கெட்டன்வெவ பகுதியில் 50 ஏக்கர் காணியில் மாம்பழச் செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளார். குறித்த அந்துப் பயிர்ச்செய்கைக் காணி, போலியான ஆவணங்களைத் தயாரித்து அரசரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பது குறித்துக் கண்டறிவதற்காகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.*

*இந்நிலையில் சந்தேகநபர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (22) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபரான பெலியத்த பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சிறில் முனசிங்க சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆகிய இருதரப்பினரால் மன்றில் முன்வைக்கப்பட்ட வாதங்களை பரிசீலனை செய்த கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ் போதரகம, சந்தேகநபரைப் பிணையில் செல்ல அனுமதிவழங்கி உத்தரவிட்டிருந்தார்.*

*அதற்கமைய தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளின் கீழ் சந்தேகநபரை நீதிவான் விடுவித்திருந்தார். மேலும் வெளிநாட்டு செல்வதற்குப் பயணத் தடை விதித்தும் உத்தரவிட்டார். மேலும் இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2025இல் வெளியிடப்பெற்றது